# பழனி குமார் அய்யாக்கு பிறந்தநாள் வாழ்த்து!!

அநீதியை குருடனாய்
கடக்கின்ற சமூகத்தை
கண்டு துவண்டு
ஆதவனாய் எழுந்து பொங்கி !!

சிந்தனை ஒளியை
சமூகத்தின் மீது பாய்த்து
அவலங்களை அழிக்க
சீர்கேடுகளை சீர்ப்படுத்த !!

கல் மனங்களை
எழுத்தெனும் உளியிலே
அன்பு வடிவிலே
உணர்வை உயராக்கி !!

கற்பனையிலே மெருகேத்தி
கவிதைச் சிலை வடிக்கும்
சமூகச் சிற்பியே
தமிழன்னையின் புதல்வனே !!

சமூக சிந்தனை மட்டுமா?-உன்
கண்ணில் பட்டவையெல்லாம்
கவியானது இயற்கையெல்லாம்
எழில் கொஞ்சி விளையாடியது !!

புதுமை பித்தனாய்
அழகின் ரசிகனாய்
பண்பில் சிறந்து
கவிதையெல்லாம் வாசித்து !!

அன்பை அடித்தளமாக்கி
மென்மையாக கருத்துரைத்து
கவிப் பறவையாக சிறகடித்து
முடித்தாய் ஐநூறு கவிதையை !!

அமர்களமாய் அடுத்த

அகவையில் நுழைந்து எல்லா
புகழும் வளமும் பெற்று
ஆயிரம் ஆயிரம் கவிப் படைத்து
பல்லாண்டு வாழ்க வளர்க !!

அன்பு அம்மா மற்றும் தளத்தில் உள்ள தோழிகள்
தோழமைகள் சார்பாக பழனி குமார் அய்யா அவர்களுக்கு

பிறந்த நாள் வாழத்துக்கள்

# சுதா யுவராஜ் ,

கோயம்புத்தூர்